பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.92 நாள்: 13.07.2019

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2 இலட்சம் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை விரைந்து முடிப்பது தொடர்பான ஆய்வு கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகள், அரசு கட்டிடங்கள், தனியார் கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்அமைப்பது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.07.2019) ரிப்பன் மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள நீர் ஆதாரங்களை புனரமைத்து புத்துயிர் அளிக்கவும், அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரிலும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் வழிகாட்டுதலின் படியும், பல்வேறுவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொது மற்றும் தனியார் கட்டிடங்களில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் புத்துயிர் பெறுவது மட்டும் அல்லாமல் புதியவை அமைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி, அலுவலக வளாகங்கள், பூங்காக்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் பூங்காக்களில் மழைநீரை சேகரித்து, அதை அந்த பூங்காக்களிலேயே பயன்படுத்துதல் மற்றும் கோவில் குளங்களை புனரமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டுள்ளது.

அனைத்து இடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைநீர் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை ஆய்வு செய்யவும்,

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்படாத கட்டிடங்களில் புதிய கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், சென்னை மாநகரின் வார்டு உதவிப் பொறியாளர், குடிநீர் உதவிப் பொறியாளர், வரி வசூலிப்பவர், குடிநீர் பணிமனை மேலாளர், சுகாதார ஆய்வாளர் ஆகிய 5 நபர்களை கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர் தலைமையிலும், சென்னை குடிநீர் வாரியத்தின் வட்டார பொறியாளர் தலைமையிலும், வார்டு வாரியாக ஒரு குழு வீதம் 200 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, பருவ மழை காலத்திற்கு முன்னதாக ஒரு வார்டுக்கு 1000 கட்டிடங்கள் வீதம் 200 வார்டுகளில் 2 இலட்சம் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்க இக்குழுக்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுநாள்வரை இக்குழுக்களால் சுமார் 53,847 கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளனவா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 24,908 கட்டிடங்களில் ஏற்கனவே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளன. 4240 கட்டிடங்களில் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளபட வேண்டும். மேலும் 24699 கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட கட்டிட உரிமையாளர்களுக்கு தங்கள் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உடனடியாக அமைக்க அலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பயன்படற்று உள்ள 23 சமுதாய கிணறுகள் கண்டறியப்பட்டுள்ளன. இக்கிணறுகள் புனரமைக்கப்பட்டு மறுபயன்பாட்டிற்கு கொண்டுவர பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள்/இளநிலை பொறியாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் வரி வசூலிப்பாளர்களுக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு குறித்த செய்முறை பயிலரங்கம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் ஊரகவளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் தலைமையில் நடத்தப்பட்டு பொதுமக்களிடையே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட தொழிற்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலர்கள் தங்கள் வார்டுகளில் உள்ள

அனைத்து கட்டிடங்களிலும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைப்பதற்கு தேவையான அனைத்து விதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு குறிப்பிட்ட காலத்திற்குள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைய வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையாளர் (வருவாய் மற்றும் நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமைப் பொறியாளர் திரு.சி.ஆறுமுகம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**